# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# அ.வ.எண். 103/2015

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ம் நாள் திங்கட்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

பி.சா.1. சிவ குமார் .

## குறுக்கு விசாரணை

1. குமர செர்லபாக்கம் எனது பூர்வீக ஊர் ஆகும். வழக்கு சொத்துக்கள் எனக்கு பாத்தியபட்டவை. வாதி கிரையபத்திரம் பதிவு செய்து தர கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றார் சரிதான். வாதி நான் கிரைய ஒப்பந்தம் போட்டதாக சொல்கிறார். நான் அந்த ஒப்பந்தம் கடனுக்காக ஏற்பட்டது என்று வாதம் செய்கிறேன். அறுவடை இயந்திரம் வாங்க பணம் கடன் கேட்டு நான் வாதியை அனுகினேன் என்பது எனது தரப்பு வழக்காகும். நான் 7ம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை என்னால் தற்போது படித்து கூற முடியாது. அது ஆங்கிலத்தில் உள்ளது. எனது பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்கு மூலத்தை எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அவர் கூறிய இடத்தில் நான் கையழுத்து செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்படவில்லை. எனது வழக்கறிஞர் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. நான் கிரைய ஒப்பந்தம் கடனுக்காக ஏற்பட்டது என்று கூறி வாதிக்கு எதிராக தனிப்பட்ட வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எந்த வகையான அறுவடை இயந்திரம், என்ன தொகைக்கு பெறப்பட்டது, யாரிடம் பெறப்பட்டது என்ற விவரம் எனது பிரமாண வாக்கு மூலத்தில் இல்லை என்றால் சரிதான். நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. கடன் உதவி பெற்றதற்கும், அறுவடை இயந்திரம் வாங்கியதற்கும் ஆவணம் இல்லை. ஆர்.சி. புத்தகம்

உள்ளது.

2. அறுவடை இயந்திரம் வாங்கியதற்கும் அதை உபயோகம் செய்ததற்கும் என்னிடம் ஆவணம் இல்லை என்றால் சரிதான். வாதி எனது ஊரில் நிலத்தை வாங்க கிரைய ஒப்பந்தம் போட்டார் என்றால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்தம் போடவில்லை. வாதி என்னிடம் வெற்று தாளில் கையழுத்து வாங்கினார். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்க தெரியாது. சார் பதிவாளர் அலுவலகத்தில் கையழுத்து போட்டு பதிவு செய்து கொடுத்தால் ரூ.3,00,000/– கடன் கொடுப்பதாக வாதி கூறினார். அதனால் கையழுத்து போட்டேன். சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எழுதி பூர்த்தியாகிதான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3. 15.09.2004 ல் வா.சா.ஆ.5 ஆவணம் எழுதி பூர்த்தி ஆகி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் முதல் பக்கத்தில் ரூ.3,00,000/– க்கு கிரையம் என்றும் முன்பணம் ரூ.50,000/– என்றும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 கிரைய ஒப்பந்தம் என்று தெரிந்துதான் நான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அன்றை தேதியில் ரூ.50,000/– என்னிடம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மொத்தமாக ரூ.3,00,000/– ஐ வாதி ஒரே தவணையாக என்னிடம் கொடுத்தார். வா.சா.ஆ.5 ல் குறிபிட்டுள்ள தொகை ரூ.3,00,000/– ஐ வாதி என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அப்போது வழக்கு சொத்தின் அசல் ஆவணங்களை நான் வாதியிடம் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.5 க்கு பிறகு வாதி பெயரில் ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் வா.சா.ஆ.7 ல் நான் கையழுத்து போட்டேன். வா.சா.ஆ.7 ல் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் பதிவு செய்திருக்கலாம். வழக்கு சொத்து குறித்து பொது அதிகாரம் அளிப்பதாக அதில் உள்ள என்றால் எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்படுத்தி 9 நாட்கள் கழித்து 24.09.2004 ல் வா.சா.ஆ.7 ஆவணத்தை பதிவு செய்து கொடுக்க சார் பதிவாளர் அலுவலகம் வந்தேனா என்றால் நான் சார் பதிவாளர் அலுவலகம் சென்றேனா எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய பதிலுறையில் 24.09.2004 ல் பொது அதிகாரம் பத்திரம் எழுதி பதிவு செய்ததில் நான் ஏற்றுக்கொண்டேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் கையழுத்து போட்டேன். பொது அதிகாரப் பத்திரம் ஏற்பட்ட தேதியில் என்னிடம் பாக்கி கிரைய தொகை ரூ.2,50,000/– வாதி கொடுத்தார் என்றால் சரியல்ல. வாதி என்னிடம ரூ.3,00,000/– கொடுத்தார். பொது அதிகாரப் பத்திரம் ஏற்பட்ட

அன்று நான் வாதியிடம் ரூ.2,50,000/– பெற்றுக்கொண்டு அசல் ஆவணங்களை ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல.

4. கடனுக்காக கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்று வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சரண்யா என்ற வழக்கறிஞர் மூலம் நான் வாதிக்கு அறிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதில் கிரைய ஒப்பந்தத்தையும் பொது அதிகார் ஆவணத்தையும் ஏற்றுக்கொண்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. அந்த அறிவிப்பில் கடனுக்காக கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றும் அறுவடை இயந்திரம் வாங்க கடன் வாங்கினேன் என்றும் கூறப்படவில்லை என்றால் அதில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.